Private E-Sevai Center
CSC Center
STAR RAINBOW SERVICES
VADAPALANI
8144337349

தமிழ் குரல் மக்கள்
தினசரி காலை நாளிதழ்
tamilmakkalkurall@gmil.com
RNI No. : TNTAM24840
உள்ளது உள்ளபடி

RS Polyclinic
OUR ESTEEMED DOCTORS
Dr M. Rajkumar — MBBS MS DNB MCH (vascular) — 98410 25996 — Sr Vascular Surgeon
Dr K. Namitha Bhuvaneswari — MS (Opthal) DO MBA — 9444 288784 — Sr Eye Surgeon
Dr Sathish Rajkumar — MBBS MS FMAS — 9445 401793 — Laparoscopic & Laser Surgeon
Dr Shanthi R — MBBS MS MCH (vascular) — 9884 650945 — Sr Vascular Surgeon
Dr Salins R — MBBS MD — 87780 87742 — General Physician
Dr Praveena E — MBBS MS (ENT) — 9944 100443 — Sr ENT Surgeon

தொகுதி - 6 | நாளிதழ் | 4 பக்கங்கள் சென்னை, 5 நவம்பர் 2026 ரூ.2/- இதழ் - 116

கடல்சார் பாதுகாப்பில் பிராந்திய நட்புறவு நாடுகளுக்கிடையேயான சார்ந்திருத்தலை வலுவானதாக மாற்ற வேண்டும்: பாதுகாப்பு அமைச்சர்

சென்னை – 5 நவம்பர், 2026 உலகளாவிய கடல்சார் பாதுகாப்புச் சூழலில் அழுத்தங்கள் அதிகரித்து வரும் நிலையில் நம்பகமான கடல்சார் உள்கட்டமைப்பு, மேம்பட்ட கடல்சார் விழிப்புணர்வு, அதிக ஒத்துழைப்பு ஆகியவற்றின் மூலமும், தடைகளை முன்கூட்டியே கணித்து, மீண்டு வரும் திறனுடனும் பிராந்திய நட்புறவு நாடுகளுக்கு இடையிலான பரஸ்பர சார்ந்திருத்தலை மிகவும் பாதுகாப்பானதாகவும் வலுவானதாகவும் மாற்ற வேண்டும் என்று பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் அழைப்பு விடுத்துள்ளார். 2026 நவம்பர் 4, அன்று புது தில்லியில் நடைபெற்ற இந்திய கடற்படையின் வருடாந்திர உயர்மட்ட சர்வதேச உத்திசார் மாநாடான இந்தோ-பசிபிக் பிராந்திய பேச்சுவார்த்தையில் உரையாற்றிய போது அவர் இதனைத் தெரிவித்தார்.

உணவு, பொது விநியோகத் துறையின் தூய்மைப் பராமரிப்பிற்கான சிறப்பு இயக்கம் 6.0 நிறைவு

சென்னை – 5 நவம்பர், 2026 உணவு, பொது விநியோகத் துறை, அதன் பொதுத்துறை நிறுவனங்கள், அதன் கீழ் இயங்கும்/இணைக்கப்பட்ட அலுவலகங்களுடன் இணைந்து, 2026 அக்டோபர் 2 முதல் அக்டோபர் 31 வரை தூய்மை பராமரிப்பிற்கான சிறப்பு இயக்கம் 6.0- ஐ செயல்படுத்தியது. இந்த இயக்கம், நிலுவையில் உள்ள பணிகளை முடிப்பதும், அலுவலக வளாகங்களில் தூய்மையை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

இந்த இயக்கம் இரண்டு கட்டங்களாக நடத்தப்பட்டது. ஆயத்தப் பணிகளுக்கான முதல் கட்டம் 2026 செப்டம்பர் 15 முதல் செப்டம்பர் 30 வரையும், அதன் செயல்பாட்டுக் கட்டம் 2026 அக்டோபர் 2 முதல் அக்டோபர் 31 வரையும் நடைபெற்றது. முதல் கட்டமான ஆயத்தப் பணிகளின் போது, நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாநில அரசுகளிடமிருந்து பெறப்பட்ட கோரிக்கைகள், பொதுமக்களின் குறைகள், அகற்றப்பட வேண்டிய கோப்புகள், தேவையற்ற பொருட்கள்/மின்னணுக் கழிவுகளை அகற்றுதல், தூய்மைப்படுத்தப்பட வேண்டிய அல்லது அழகுபடுத்தப்பட வேண்டிய இடங்கள் கண்டறியப்பட்டன.

இந்தக் காலக்கட்டத்தில், மத்திய நுகர்வோர் விவகாரங்கள், உணவு, பொது விநியோகத்துறை அமைச்சர் பிரல்ஹாத் ஜோஷி நடைபெற்றது. அதில், தூய்மை பராமரிப்பிற்கான சிறப்பு இயக்கம் 6.0- ஐச் சிறப்பாகச் செயல்படுத்துவதற்கான தேவையான வழிகாட்டுதல்களை அமைச்சர் வழங்கினார்.

சாலைப் போக்குவரத்தில் கார்பன் டை ஆக்ஸைடு உமிழ்வைக் குறைப்பதற்கான நடைமுறைகளை செயல்படுத்த நிதி

சென்னை – 5 நவம்பர், 2026 சாலைப் போக்குவரத்தில் கார்பன் டை ஆக்ஸைடு உமிழ்வைக் குறைப்பதற்கான நடைமுறைகளை செயல்படுத்த நிதி ஆயோக் - ஜிஐஇசட் இந்தியா இடையே ஒப்பந்தம்.

சாலைப் போக்குவரத்தில் கார்பன் டை ஆக்ஸைடு வாயு உமிழ்வைக் குறைக்கும் பணிகளைத் துரிதப்படுத்துவதற்காக, ஆசியப் போக்குவரத்துக்கான தேசிய அளவிலான பங்களிப்பு முன்முயற்சியின் இரண்டாம் கட்டத்தின் கீழ், நிதி ஆயோக் அமைப்பு மற்றும் ஜெர்மனியின் ஜிஐஇசட் இந்தியா நிறுவனம் இடையே 2026 நவம்பர் 3 அன்று ஒப்பந்தம் கையெழுத்தானது. ஜெர்மனி அரசின் சர்வதேச பருவநிலை முன்முயற்சியின் கீழ் செயல்படுத்தப்படும் இந்த பிராந்திய அளவிலான திட்டத்தில், உலக வளங்கள் நிறுவனம், தூய்மைப் போக்குவரத்துக்கான சர்வதேச கவுன்சில் உள்ளிட்ட முக்கிய அமைப்புகள் கூட்டாக இணைந்து செயல்படுகின்றன.

சுற்றுச்சூழலுக்கு உகந்த, குறைந்த அளவு கார்பன் டை ஆக்ஸைடு வாயுவை வெளியிடும் போக்குவரத்து முறைக்கு இந்தியா மாறி வரும் சூழலில், சாலை சரக்குப் போக்குவரத்தில் புகை உமிழ்வைக் குறைப்பது மிக முக்கியமானதாகக் கருதப்படுகிறது. நடுத்தர, கனரக சரக்கு வாகனங்களை மின்சார வாகனங்களாக மாற்றும் நடவடிக்கை தற்போதைய நிலையில் ஆரம்பக் கட்டத்தில் உள்ளது. எனவே போதிய மின்னேற்றக் கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துதல், புதிய நிதி ஆதரவு முறைகளை உருவாக்குதல், முறையான ஒழுங்குமுறை கட்டமைப்பை வலுப்படுத்துதல் ஆகியவற்றின் அவசியத்தை இந்த ஒப்பந்தம் உறுதிப்படுத்துகிறது. பருவநிலை மாற்றத்தைக் கட்டுப்படுத்துவதில் இந்தியா நிர்ணயித்துள்ள இலக்குகளை எட்டுவதற்கு இந்த நடவடிக்கை வழிவகுக்கும்.

விமான சேவையில் கண்ணியத்தை மேம்படுத்துவது தொடர்பான விழிப்புணர்வு பயிற்சி கையேடு வெளியீடு

சென்னை – 5 நவம்பர், 2026 மத்திய சமூகநீதி, அதிகாரமளித்தல் அமைச்சகத்தின் மாற்றுத்திறனாளிகள் அதிகாரமளித்தல் துறை, விமானப் போக்குவரத்து துறை சார்பில், இந்திய விமான போக்குவரத்து துறை சேவையை கண்ணியமாக மேற்கொள்வது குறித்த விழிப்புணர்வு பயிற்சி கையேடு வெளியிடப்பட்டது. புதுதில்லியில் 2026 நவம்பர் 4 ம் தேதி நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் மாற்றுத்திறனாளிகள் மேம்பாட்டு துறையின் கூடுதல் செயலாளர் மன்மீத் கவுர் நந்தா, பயிற்சி கையேட்டை வெளியிட்டார். மாற்றுத்திறனாளிகளுக்கு கண்ணியமான, பாதுகாப்பான, சுதந்திரமான விமான பயணத்தை உறுதி செய்ய வேண்டும் என்பதை இந்த கையேடு வலியுறுத்துகிறது. இந்நிகழ்ச்சியில் பேசிய மன்மீத் கவுர் நந்தா, சர்வதேச விளையாட்டு போட்டியில் பங்கேற்பதற்காக விமானத்தில் எகிப்திற்கு பயணம் மேற்கொண்ட மாற்றுத்திறனாளி வீராங்கனையின் கடினமான பயணத்தை நினைவுகூர்ந்தார். வீராங்கனையின் சக்கர நாற்காலி சேதப்படுத்தப்பட்ட நிலையில், பல இன்னல்களுக்கு பிறகும் அவர் விளையாட்டில் சாதித்ததாக குறிப்பிட்டார். இதுபோன்ற தடைகள், சூழலை தவிர்க்கும் பொருட்டு, விமான நிறுவனங்கள், பணியாளர்கள் பிரத்யேக வழிமுறைகளை பின்பற்ற வேண்டும் என்றும் குறிப்பிட்டார். விமான போக்குவரத்து பயணிகள், மாற்றுத்திறனாளிகளுக்கு கண்ணியமான முறையில் இருக்க வேண்டும் என்பதை உறுதி செய்ய வேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

கோடக் மஹிந்திரா வங்கி-டாய்ச்சி வங்கி ஆக்டீன்ஜெசெல்ஷாஃப்ட் இடையேயான வர்த்தக நடவடிக்கைகள்

சென்னை – 5 நவம்பர், 2026 கோடக் மஹிந்திரா வங்கி-டாய்ச்சி வங்கி ஆக்டீன்ஜெசெல்ஷாஃப்ட் இடையேயான வர்த்தக நடவடிக்கைகள், அது தொடர்பான பிற பரிவர்த்தனைகளுக்கும் இந்திய போட்டி ஆணையம் ஒப்புதல்.

கோடக் மஹிந்திரா வங்கி-டாய்ச்சி வங்கி ஆக்டீன்ஜெசெல்ஷாஃப்ட் இடையேயான வர்த்தக நடவடிக்கைகள், அது தொடர்பான பிற பரிவர்த்தனைகளுக்கும் இந்தியப் போட்டி ஆணையம் ஒப்புதல் அளித்துள்ளது.

இந்த முன்மொழியப்பட்ட இணைப்பு, டாய்ச்சி வங்கி ஆக்டீன்ஜெசெல்ஷாஃப்ட்டின் (விற்பனையாளர்) சில்லறை வங்கிச் சேவை/தனியார் வங்கிச் சேவை, செல்வ மேலாண்மை வணிகத்தை (இலக்கு வணிகம்), அதன் இந்தியக் கிளைகள் மூலம் ஒரு தொடர் வணிகமாக, மொத்த விற்பனை அடிப்படையில், கோடக் மஹிந்திரா வங்கியால் (கையகப்படுத்துபவர்) கையகப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

மேலும், தங்களது இணை நிறுவனங்கள் மூலம், விற்பனையாளரின் மறைமுகமான முழு உரிமையுடைய துணை நிறுவனமான டாய்ச்சி இன்வெஸ்ட்மென்ட்ஸ் இந்தியா பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தின் முதலீட்டு ஆலோசனை வணிகம், பங்கு பரிவர்த்தனை மேலாண்மை சேவைகள், வணிகத்தின் வாடிக்கையாளர்களை, கையகப்படுத்துபவரின் தொடர்புடைய முழு உரிமையுடைய துணை நிறுவனங்களுக்குப் பரிந்துரைப்பபங்குப தற்கான ஏற்பாடுகளைச் செய் மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ளனர்.

நிலக்கரி அமைச்சகம் சிறப்பு இயக்கம் 6-ன் கீழ் திட்டமிடப்பட்ட இலக்குகளுக்கு மேலான பணிகளை நிறைவு செய்துள்ளது

சென்னை – 5 நவம்பர், 2026 சிறப்பு இயக்கம் 6-ன் கீழ் திட்டமிடப்பட்டப் பணிகளை மத்திய நிலக்கரி அமைச்சகம் மற்றும் அதனுடைய பொதுத்துறை நிறுவனங்கள் சிறப்பாகச் செயல்படுத்தி வருகின்றன.

அமைச்சகம் சார்பில் 1,565 இடங்களைத் தூய்மைப்படுத்த இலக்கு நிர்ணயித்திருந்த நிலையில் 2,035 இடங்களைத் தூய்மைப்படுத்தியுள்ளது. 10.18 மில்லியன் சதுரஅடி பரப்பளவை தூய்மைப்படுத்த திட்டமிட்டிருந்த நிலையில் 14.84 மில்லியன் சதுரஅடி பரப்பளவு தூய்மைப்படுத்தப்பட்டுள்ளது. அத்துடன் பொதுமக்களிடமிருந்து பெறப்பட்ட 253 குறைகளுக்கும் தீர்வு காணப்பட்டுள்ளது. பிரதமர் அலுவலகத்திலிருந்து பெறப்பட்ட 52 குறிப்புகளுக்கும் முழுமையான தீர்வு காணப்பட்டுள்ளன.

மொத்தம் 10,909 மெட்ரிக் டன் கழிவுப்பொருட்களை அகற்ற இலக்கு நிர்ணயித்திருந்த நிலையில் 17,686 மெட்ரிக் டன் கழிவுப்பொருட்கள் அகற்றப்பட்டன. இதன்மூலம் ரூ. 61.41 கோடி வருவாய் ஈட்டப்பட்டது. மேலும் 59,593 கோப்புகளை ஆய்வு செய்ய இலக்கு நிர்ணயித்திருந்த நிலையில் 1,79,793 நேரடி மற்றும் மின்னணு கோப்புகள் ஆய்வு செய்யப்பட்டன. அவற்றில் 1,70,336 கோப்புகள் தேவையற்றவை என்று கண்டறியப்பட்டு நீக்கப்பட்டன.

ராய்ரங்பூரில், 4,000-க்கும் மேற்பட்ட நோயாளிகளுக்கு ஆயுதப்படை மருத்துவ சேவைகள் பிரிவினர் சிகிச்சை

சென்னை – 5 நவம்பர், 2026 ஒடிசாவின் மயூர்பஞ்ச் மாவட்டத்தில் உள்ள ராய்ரங்பூரில், ஆயுதப்படை மருத்துவ சேவைகள் அமைப்பு 'ஆபரேஷன் டிரிஷ்டி '-ன் 12- வது பதிப்பை வெற்றிகரமாக நடத்தியது. 2026 நவம்பர் 02 முதல் 04 வரை நடைபெற்ற இந்த பல்நோக்கு மருத்துவ முகாமில், 4,000- க்கும் மேற்பட்ட நோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டதுடன், பார்வையை மீட்டெடுக்கும் வகையிலான 365 கண் அறுவை சிகிச்சைகளும் மேற்கொள்ளப்பட்டன. இந்த முகாமின் மூலம், அப்பகுதி மக்களுக்கு மேம்பட்ட மருத்துவ சேவைகள் முற்றிலும் இலவசமாக வழங்கப்பட்டன.

ஆயுதப்படை மருத்துவ சேவைகளின் தலைமை இயக்குநர் ஏர் மார்ஷல் சந்தீப் தரேஜா, இன்று முகாமிற்கு வருகை தந்து, அங்கு ஆலோசனை பெற்று வருபவர்களுடனும், அறுவை சிகிச்சைக்குப் பிந்தைய பராமரிப்பில் இருப்பவர்களுடனும் கலந்துரையாடினார். கண் அறுவை சிகிச்சை செய்துகொண்ட நோயாளிகளுக்கு அவர் மருத்துவ உபகரணங்கள் அடங்கிய தொகுப்புகளையும் வழங்கினார்.

RS Polyclinic
OUR ESTEEMED DOCTORS
Dr M. Rajkumar — MBBS MS DNB MCH (vascular) — 98410 25996 — Sr Vascular Surgeon
Dr K. Namitha Bhuvaneswari — MS (Opthal) DO MBA — 9444 288784 — Sr Eye Surgeon
Dr Sathish Rajkumar — MBBS MS FMAS — 9445 401793 — Laparoscopic & Laser Surgeon
Dr Shanthi R — MBBS MS MCH (vascular) — 9884 650945 — Sr Vascular Surgeon
Dr Salins R — MBBS MD — 87780 87742 — General Physician
Dr Praveena E — MBBS MS (ENT) — 9944 100443 — Sr ENT Surgeon

தீபாவளிக்கு முன் வீட்டைப் புதுப்பிக்க உதவும் ஐந்து எளிய மேம்பாடுகள்: IBO வழங்கும் யோசனைகள்



சென்னை – 5 நவம்பர், 2026 சென்னை: தீபாவளிப் பண்டிகையை முன்னிட்டு நண்பர்கள் மற்றும் குடும்பத்தினரை வரவேற்க வீடுகளைப் புதுப்பிப்பதில் பலரும் ஆர்வம் காட்டுகின்றனர். இதற்காக அதிக செலவில் பெரிய அளவிலான புதுப்பித்தல் பணிகளை மேற்கொள்ள வேண்டிய அவசியமில்லை. சுவர்களுக்கு புதிய வண்ணம் பூசுவது, விளக்குகளை மாற்றுவது, சமையலறை மற்றும் குளியலறைப் பொருத்துதல்களை மேம்படுத்துவது போன்ற சிறிய மாற்றங்களே வீட்டின் தோற்றத்தையும் பயன்பாட்டையும் மேம்படுத்த உதவும். அந்த வகையில், வீட்டு மேம்பாட்டுப் பொருட்களை வழங்கும் IBO, தீபாவளிக்கு முன் வீடுகளைப் புதுப்பிக்க ஐந்து நடைமுறை யோசனைகளை முன்வைத்துள்ளது.

அதன்படி, அறைகளுக்குப் புத்துணர்ச்சி அளிக்க புதிய வண்ணங்களில் பெயிண்ட் பூசுவதுடன், தரமான ப்ரைமர் மற்றும் இன்டீரியர் எமல்ஷன் வகைகளைத் தேர்ந்தெடுக்கலாம். அதேபோல், LED பல்புகள், பேனல் விளக்குகள், ஸ்பாட்லைட்கள் மற்றும் பென்டண்ட் விளக்குகளைப் பயன்படுத்தி வீட்டின் ஒவ்வொரு பகுதியையும் அழகாக மாற்றலாம். சமையலறையில் பழைய குழாய்கள், ஃபியூசெட்டுகள் மற்றும் சிங்குகளைப் புதுப்பிப்பதன் மூலம் அன்றாடப் பயன்பாட்டை எளிதாக்க முடியும். குளியலறையில் ஷவர்ஹெட், வாஷ் பேசின், குழாய்கள் மற்றும் சேமிப்பு உபகரணங்களை மாற்றுவதும் சிறந்த மேம்பாடாக அமையும். மேலும், அலமாரிகள் மற்றும் மரச்சாமான்களை மாற்றுவதற்குப் பதிலாக, அலங்கார லேமினேட்கள், வார்னிஷ் மற்றும் மரப் பூச்சுகளைப் பயன்படுத்தி அவற்றுக்குப் புதிய தோற்றத்தை அளிக்கலாம்.

இந்த வீட்டு மேம்பாட்டுத் தேவைகளுக்கான பல்வேறு தயாரிப்புகளை IBO வழங்குகிறது. மேலும், அக்டோபர் 8 முதல் நவம்பர் 8 வரை மேற்கொள்ளப்படும் ஒவ்வொரு கொள்முதலுக்கும் ஒரு இலவச உறுதியான பரிசு வழங்கப்படுகிறது. இந்தச் சலுகையைப் பயன்படுத்தி, குறைந்த செலவில் வீட்டைப் புதுப்பிப்பதுடன் பண்டிகைக் காலத்தை மகிழ்ச்சியுடன் வரவேற்கலாம்.

சூரியசக்தியால் இயங்கும் 50,000 தொலைத்தொடர்பு கோபுரங்கள்: உலகளவில் புதிய அளவுகோலை எட்டியிருக்கும் இண்டஸ் டவர்ஸ்!

குருகிராம் – 5 நவம்பர், 2026 உலகின் மிகப்பெரிய தொலைத்தொடர்பு கோபுர உள்கட்டமைப்பு நிறுவனங்களில் ஒன்றான இண்டஸ் டவர்ஸ் லிமிடெட், இந்தியா முழுவதும் சூரியசக்தியால் இயங்கும் 50,000 தொலைத்தொடர்பு மையங்களை நிறுவியிருக்கிறது. தொலைத்தொடர்பு உட்கட்டமைப்புத் துறையில் இந்த மைல்கல்லை எட்டிய முதல் நிறுவனம் என்ற உலகளாவிய சாதனையை இதன்மூலம் அது படைத்துள்ளது. இனிவரும் காலங்களில், தனது சூரியசக்தி கட்டமைப்பை 1,00,000 தொலைத்தொடர்பு மையங்களாக விரிவுபடுத்த இலக்கு நிர்ணயித்துள்ள இண்டஸ் டவர்ஸ், நிலைப்புத்தன்மையுள்ள தொலைத்தொடர்பு உட்கட்டமைப்பில் தனது தலைமை இடத்தை இதன்மூலம் மேலும் வலுப்படுத்தவிருக்கிறது.

ஒட்டுமொத்தமாக சுமார் 300 மெகாவாட் நிறுவப்பட்ட சூரியசக்தி திறன் வசதிகளுடன், தொலைத்தொடர்பு உட்கட்டமைப்புத் துறையில் இந்த மைல்கல்லை எட்டிய முதல் நிறுவனம் என்ற உலகளாவிய சாதனையை இதன்மூலம் அது படைத்துள்ளது. இனிவரும் காலங்களில், தனது சூரியசக்தி கட்டமைப்பை 1,00,000 தொலைத்தொடர்பு மையங்களாக விரிவுபடுத்த இலக்கு நிர்ணயித்துள்ள இண்டஸ் டவர்ஸ், நிலைப்புத்தன்மையுள்ள தொலைத்தொடர்பு உட்கட்டமைப்பில் தனது தலைமை இடத்தை இதன்மூலம் மேலும் வலுப்படுத்தவிருக்கிறது.

ஒட்டுமொத்தமாக சுமார் 300 மெகாவாட் நிறுவப்பட்ட சூரியசக்தி திறன் வசதிகளுடன், தொலைத்தொடர்பு உட்கட்டமைப்புத் துறையில் விநியோகிக்கப்படும் புதுப்பிக்கத்தக்க மிகப்பெரிய ஆற்றல் சூழல் அமைப்புகளில் ஒன்றை இத்திட்டம் உருவாக்கியுள்ளது. நிறுவனத்தின் கணக்கீட்டின்படி, இதன் சுற்றுச்சூழல் தாக்கம் என்பது சுமார் 2 கோடி மரங்களை நட்டு பராமரிப்பதற்கு சமமானது. மேலும், வழக்கமான எரிசக்தி ஆதாரங்களின் பயன்பாட்டைக் குறைப்பதன் மூலம் ஆண்டிற்குச் சுமார் 4,20,000 டன் கார்பன் உமிழ்வைக் குறைக்கவும் இது உதவுகிறது.

இந்த உலகளாவிய சாதனை அளவுகோலை நிறுவியது குறித்து இண்டஸ் டவர்ஸ் லிமிடெட் நிறுவனத்தின் நிர்வாக இயக்குநரும் தலைமைச் செயல் அதிகாரியுமான (MD & CEO) பிரச்சூர் ஷா கூறுகையில், “கிட்டத்தட்ட 300 மெகாவாட் திறனுடன் சூரியசக்தியால் இயங்கும் 50,000 தொலைத்தொடர்பு மையங்கள் என்ற இலக்கை அடைவதென்பது, வெறும் செயல்பாட்டு ரீதியிலான சாதனை மட்டுமல்ல; நிலைப்புத்தன்மையுள்ள தொலைத்தொடர்பு உள்கட்டமைப்பின் பரிணாம வளர்ச்சியில் இது ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க தருணமாகும். இந்த அளவை எட்டிய முதல் பேசிவ் உள்கட்டமைப்பு நிறுவனம் என்ற வகையில், புத்தாக்கம், தொழில்நுட்பம் மற்றும் நிலைப்புத்தன்மை ஆகியவை ஒன்றிணைந்து இத்துறைக்கும், சுற்றுச்சூழலுக்கும் அர்த்தமுள்ள, ஆக்கப்பூர்வ தாக்கத்தை உருவாக்க முடியும் என்பதை நாங்கள் நிரூபித்துள்ளோம். 2024-ல் எங்கள் சூரியசக்தி திட்டத்தை வேகப்படுத்திய குறுகிய காலத்திலேயே, தூய்மையான ஆற்றலை வழங்குதல், கார்பன் உமிழ்வைக் குறைத்தல் மற்றும் வலையமைப்பின் மீள்திறனை வலுவாக்கல் ஆகியவற்றின் மூலம் தொலைத்தொடர்பு துறையில் விநியோகிக்கப்பட்ட சூரியசக்தி அமைப்புகளில் மிகப்பெரிய சூழலமைப்பை நாங்கள் உருவாக்கியுள்ளோம்.

பொறுப்பான வளர்ச்சிக்கான எங்களது அர்ப்பணிப்பை இந்த சாதனை பிரதிபலிக்கிறது. ஆற்றல் செலவை மேலும் குறைக்கும் அதே வேளையில், 1,00,000 தொலைத்தொடர்பு மையங்களை சூரியசக்தி மூலம் இயக்குவதையும், நிலையான டிஜிட்டல் உள்கட்டமைப்புக்கான புதிய தரஅளவுகோல்களை உருவாக்குவதையும் நோக்கமாகக் கொண்டு நாங்கள் தொடர்ந்து செயல்படுகிறோம். முக்கியமாக, இந்தப் பயணத்தின் மூலம் நாங்கள் பெற்றிருக்கும் நிபுணத்துவம், இயக்க முறைமை மற்றும் தொழில்நுட்பத் தளங்கள், ஆப்பிரிக்காவிலும் இந்த வெற்றிகரமான மாதிரியை செயல்படுத்த எங்களை ஆயத்தப்படுத்தியுள்ளன. அங்கு டிஜிட்டல் இணைப்பை விரிவுபடுத்த நம்பகமான மற்றும் நிலையான ஆற்றல் தீர்வுகள் மிக முக்கியமானவை. இதற்குமுன் இருந்திராத வகையில் புதுப்பிக்கத்தக்க ஆற்றல் தீர்வுகளை சிறப்பாக பயன்படுத்தவும், நிர்வகிக்கவும் முடியும் என்பதை நாங்கள் நிரூபித்திருக்கிறோம். இதுபோன்ற நிலையான தொலைத்தொடர்பு அமைப்புகளை உருவாக்க உதவவும், இத்துறைக்கு புதிய மைல்கற்களை நிர்ணயிக்கவும் எங்களால் முடியும் என்ற தனித்துவமான போட்டி ஆதாயத்தை சாதகமான அனுபவ திறனையும் நாங்கள் பெற்றுள்ளோம்,” என்று தெரிவித்தார்.

சுற்றுச்சூழல் நிலைத்தன்மையையும் செயல்பாட்டுத் திறனையும் இணைத்து எதிர்காலத்திற்குத் தேவையான தொலைத்தொடர்பு உள்கட்டமைப்பை உருவாக்குவதில் இண்டஸ் டவர்ஸின் தலைமைத்துவ பண்பை இச்சாதனை மேலும் உறுதிப்படுத்துகிறது. மேம்பட்ட புதுப்பிக்கத்தக்க ஆற்றல் தீர்வுகள், டிஜிட்டல் கண்காணிப்பு அமைப்புகள் மற்றும் தரவு சார்ந்த பராமரிப்புத் திறன்களைத் தனது வலையமைப்பு முழுவதும் ஒருங்கிணைப்பதன் மூலம், டீசல் எரிபொருள் சார்புநிலையைக் குறைத்து, எரிசக்தி பாதுகாப்பை அதிகரித்து, பசுமையான டிஜிட்டல் இணைப்பை நோக்கிய மாற்றத்தை இண்டஸ் டவர்ஸ் – ன் இச்செயல்திட்டம் விரைவுபடுத்துகிறது.

வினாடிக்கு 100 ஜிகாபிட் வேகத்தில் தரவுகளைக் கடத்தும் திறன் கொண்ட புதிய சிலிக்கான்

சென்னை – 5 நவம்பர், 2026 வினாடிக்கு 100 ஜிகாபிட் வேகத்தில் தரவுகளைக் கடத்தும் திறன் கொண்ட புதிய சிலிக்கான் சிப்பை உருவாக்கிய இந்திய ஆராய்ச்சியாளர்கள்.

எதிர்கால 6G கம்பியில்லா தொலைத்தொடர்பு கட்டமைப்புக்கு உதவும் வகையில், வினாடிக்கு 100 ஜிகாபிட் வேகத்தில் தரவுகளைக் கடத்தும் திறன் கொண்ட புதிய சிலிக்கான் சிப் ஒன்றை இந்திய ஆராய்ச்சியாளர்கள் உருவாக்கியுள்ளனர். மத்திய அறிவியல், தொழில்நுட்பத் துறையின் கீழ் இயங்கும் தன்னாட்சி அமைப்பான ஜவஹர்லால் நேரு மேம்பட்ட அறிவியல் ஆராய்ச்சி மையத்தின் ஆராய்ச்சியாளர்கள் இந்த முன்னோடி ஆய்வை மேற்கொண்டுள்ளனர்.

வழக்கமான தகவல் தொடர்பு வழிகளில் உள்ள தடைகள் அல்லது வளைவுகள் சமிக்ஞைகளை பலவீனப்படுத்தும் நிலையில், கிராபீன் போன்ற நுண் கட்டமைப்பைக் கொண்ட சிலிக்கான் படிகத்தை இவர்கள் உருவாக்கியுள்ளனர். இதன் மூலம் தடைகளை எளிதாகக் கடந்து டெராஹெர்ட்ஸ் அலைகளை எவ்வித சமிக்ஞை இழப்பும் இன்றி தடையின்றிப் பயணிக்க வைக்க முடியும் என்பது நிரூபிக்கப்பட்டுள்ளது.

இந்த அதிவேகத் தொழில்நுட்பத்தின் மூலம் 5 ஜிபி அளவிலான HD திரைப்படத்தை வெறும் அரை வினாடிக்குள் பரிமாறிக்கொள்ள முடியும் என்பது குறிப்பிடத்தக்கது. குறைந்த இழப்புடன் சிப்களிலேயே அலைகளை ஒருங்கிணைக்கும் சிறிய அளவிலான மின்சுற்றுகளை உருவாக்க இந்த கண்டுபிடிப்பு வழிவகுக்கும்.



இந்த தீபாவளிக்கு புத்துயிர் பெறும் தமிழ்நாட்டின் ஊத்துக்குளி வெண்ணெய் பாரம்பரியம்

சென்னை – 5 நவம்பர், 2026 இந்திய சமையலறைகளில் நெய் முக்கிய இடம் பெற்றிருந்தாலும், அதன் பின்னால் இருக்கும் ஒவ்வொரு பகுதியின் தனித்துவமான பாரம்பரியம் பற்றி பலருக்கும் அதிகம் தெரிவதில்லை. தமிழ்நாட்டின் ஊத்துக்குளி, பல தலைமுறைகளாக விவசாயக் குடும்பங்களாலும் பாரம்பரிய பால் உற்பத்தி முறைகளாலும் உருவான வெண்ணெய் தயாரிப்பு பாரம்பரியத்திற்குப் பெயர் பெற்றது. இந்த தீபாவளியை முன்னிட்டு, இந்த பாரம்பரியத்தை மேலும் பலரிடம் கொண்டு சேர்க்கும் வகையில், ஊத்துக்குளி வெண்ணெயைக் கொண்டு தயாரிக்கப்பட்ட ஆஷிர்வாத் பசு நெய்யை ஆஷிர்வாத் அறிமுகப்படுத்துகிறது. இதன் மூலம் ஊத்துக்குளியின் பால் உற்பத்தி பாரம்பரியத்தையும் அதன் பின்னணியில் உள்ள கதையையும் தமிழ்நாடு முழுவதும் உள்ள நுகர்வோரிடம் கொண்டு சேர்க்க ஆஷிர்வாத் விரும்புகிறது.

ஊத்துக்குளியில் இருந்து பெறப்படும் வெண்ணெயைக் கொண்டு தயாரிக்கப்படும் இந்த புதிய நெய், மக்கள் அன்றாட பயன்படுத்தும் ஒரு உணவுப் பொருளின் வேர்களையும் அதன் பின்னால் இருக்கும் பாரம்பரியத்தையும் அவர்களுடன் இணைக்க முயல்கிறது. அதே நேரத்தில், அவர்கள் ஏற்கனவே நம்பும் ஒரு பிராண்டின் உறுதியையும் வழங்குகிறது.

ஊத்துக்குளியின் விவசாயக் குடும்பங்களுக்கு பால் உற்பத்தி என்பது வெறும் வாழ்வாதாரம் மட்டுமல்ல, அது அவர்களின் வாழ்க்கையின் ஒரு பகுதியாகும். கால்நடைகளை அக்கறையுடன் பராமரிப்பது முதல் தலைமுறை தலைமுறையாகத் தொடரும் முறைகள் வரை, இந்த பாரம்பரியம் அவர்களின் அன்றாட வாழ்வோடு இணைந்துள்ளது. விவசாயிகளுக்கும் அவர்களின் கால்நடைகளுக்கும் இடையேயான இந்த நெருக்கமான உறவுதான், காலப்போக்கில் ஊத்துக்குளியை வெண்ணெய்க்குப் பெயர் பெற்ற பகுதியாக உருவாக்கியுள்ளது. இந்தக் கதையை மேலும் பலரிடம் கொண்டு செல்வதன் மூலம், தமிழ்நாட்டின் உணவுப் பாரம்பரியத்திற்கு பங்களித்து வரும் மக்களுக்கும் அவர்களின் வழக்கமான முறைகளுக்கும் அதிக அங்கீகாரம் கிடைக்க வேண்டும் என்பதே ஆஷிர்வாதின் நோக்கம்.

இந்த அறிமுகம் குறித்து விவேக் கூக்கல், துணைத் தலைவர் மற்றும் வணிகத் தலைவர் – பால் மற்றும் பானங்கள், உணவுப் பிரிவு, ITC லிமிடெட், கூறுகையில்: “பல தலைமுறைகளாக விவசாயக் குடும்பங்களால் வளர்க்கப்பட்ட வளமான வெண்ணெய் தயாரிப்பு பாரம்பரியம் ஊத்துக்குளிக்கு உள்ளது. ஊத்துக்குளி வெண்ணெயைக் கொண்டு தயாரிக்கப்பட்ட ஆஷிர்வாத் பசு நெய் மூலம், இந்தப் பகுதியின் பாரம்பரியத்தை வெளிச்சத்திற்கு கொண்டு வருகிறோம். ஊத்துக்குளியின் பாரம்பரியத்தையும் ஆஷிர்வாதின் நம்பகமான அனுபவத்தையும் இதில் இணைத்துள்ளோம். குடும்பம், கலாசாரம் மற்றும் பாரம்பரியத்தை வெளிப்படுத்துவதில் உணவு முக்கிய பங்கு வகிக்கும் தீபாவளி காலத்தில், இது இன்னும் சிறப்பான அர்த்தத்தைப் பெறுகிறது என்று நாங்கள் நம்புகிறோம்.”



ஊத்துக்குளி வெண்ணெய், ஊத்துக்குளி வெண்ணெயைக் கொண்டு தயாரிக்கப்படும் ஆஷிர்வாத் பசு நெய்யின் முக்கிய அம்சமாக உள்ளது. ஊத்துக்குளியில் இருந்து பெறப்படும் வெண்ணெய், இந்த நெய் தயாரிப்பில் பயன்படுத்தப்படும் வெண்ணெயின் ஒரு பகுதியாகும். ஒரு கிலோ ஆஷிர்வாத் ஆலையில், நெய்யின் இயல்பான மணத்தை வெளிக்கொண்டு வர வெண்ணெய் 3.5 மணி நேரம் மெதுவாக சமைக்கப்படுகிறது. பின்னர் அதன் தனித்துவமான துகள்கள் நிறைந்த தன்மையைப் பெற 72 மணி நேரம் ஓய்வெடுக்க வைக்கப்படுகிறது. ஊத்துக்குளியில் இருந்து கிடைக்கும் வெண்ணெயின் பாரம்பரியத்தையும், ஆஷிர்வாதின் நெய் தயாரிப்பு அனுபவத்தையும் இணைக்கும் இந்த முறை, அன்றாட சமையலுக்கும் பண்டிகைக் கால உணவுகளுக்கும் ஏற்ற நெய்யை உருவாக்குகிறது.

இதன் அறிமுகத்திற்காக உருவாக்கப்பட்டுள்ள குறும்படம், ஊத்துக்குளியின் விவசாயக் குடும்பங்களிடமிருந்து வெண்ணெய் ஓசூர் ஆலைக்குச் செல்லும் பயணத்தை பதிவு செய்கிறது. நெய்யின் பின்னால் இருக்கும் மக்களையும் அதன் தயாரிப்பு முறைகளையும் இந்தப் படம் வெளிப்படுத்துகிறது.

இந்த தீபாவளியில், ஊத்துக்குளி வெண்ணெயைக் கொண்டு தயாரிக்கப்பட்ட ஆஷிர்வாத் பசு நெய், அந்தப் பகுதியின் பால் உற்பத்தி பாரம்பரியத்தையும் அதன் பின்னால் இருக்கும் விவசாயக் குடும்பங்களின் கதையையும் தமிழ்நாடு முழுவதும் உள்ள பண்டிகைக் கால சமையலறைகளுக்கு கொண்டு வருகிறது.

இந்த தயாரிப்பு தமிழ்நாடு முழுவதும் உள்ள சில்லறை விற்பனை நிலையங்கள் மற்றும் முன்னணி விரைவு வர்த்தக தளங்களில் கிடைக்கிறது. 500 மில்லி ₹550-க்கும், 200 மில்லி ₹220-க்கும் கிடைக்கும்.

Printed by R.SATHYANARAYANAN and published by R.SATHYANARAYANAN on behalf of R.SATHYANARAYANAN and printed at Chennai Offset Printers, No.191, 212, Khaja Khan Bhandar Street, Ellis Road, Chennai-600 002, and published at No.11, South Perumal Koil Street, Vadapalani, Chennai - 600 026.
Editor: R.SATHYANARAYANAN

செப்டம்பர் 30, 2026 நிலவரப்படி, ஒருங்கிணைந்த கடன் சொத்து மதிப்பு ₹2,09,317 கோடிகள் ஆண்டுக்கு ஆண்டு 42% கடன்

சென்னை – 5 நவம்பர், 2026

செப்டம்பர் 30, 2026 நிலவரப்படி, ஒருங்கிணைந்த கடன் சொத்து மதிப்பு ₹2,09,317 கோடிகள் ஆண்டுக்கு ஆண்டு 42% கடன் சொத்து மதிப்பு வளர்ச்சியுடன் ₹ 61,644 கோடிகள் உயர்வு அரை ஆண்டிற்கான ஒருங்கிணைந்த வரிகளுக்கு பிந்தைய லாபம் ₹ 6,103 கோடிகள், ஆண்டுக்கு ஆண்டு 39% உயர்வு!

செப்டம்பர் 30, 2026 நிலவரப்படி, தனிப்பயன் கடன் சொத்து மதிப்பு ₹1,87,810 கோடிகள் ஆண்டுக்கு ஆண்டு 42% கடன் சொத்து மதிப்பு (Loan AUM) வளர்ச்சியுடன் ₹ 55,505 கோடிகள் உயர்வு அரை ஆண்டிற்கான தனிப்பயன் வரிகளுக்கு பிந்தைய லாபம் ₹ 5,527 கோடிகள், ஆண்டுக்கு ஆண்டு 26% உயர்வு

செப்டம்பர் 30, 2026 நிலவரப்படி, ஒருங்கிணைந்த தங்கக் கடன் சொத்து மதிப்பு (Consolidated Gold Loan AUM) ₹ 1,93,212 கோடிகள் ஆண்டுக்கு ஆண்டு 46% தங்கக் கடன் சொத்து மதிப்பு (Gold Loan AUM) வளர்ச்சியுடன் ₹ 61,214 கோடிகள் உயர்வு

முடிவுகள்

செப்டம்பர் 30, 2026 உடன் முடிவடைந்த காலாண்டு மற்றும் அரை ஆண்டிற்கான தணிக்கை செய்யப்படாத தனிப்பயன் (standalone) மற்றும் ஒருங்கிணைந்த (consolidated) நிதி முடிவுகளைப் பரிசீலித்து ஒப்புதல் அளிப்பதற்காக முத்தூட் ஃபைனான்ஸ் லிமிடெட் நிறுவனத்தின் இயக்குநர் குழு கூட்டம் இன்று நடைபெற்றது.

முத்தூட் ஃபைனான்ஸ் லிமிடெட் நிறுவனத்தின் ஒருங்கிணைந்த முடிவுகள் முத்தூட் ஃபைனான்ஸ் லிமிடெட் நிறுவனத்தின் ஒருங்கிணைந்த கடன் சொத்து மதிப்பு (Consolidated Loan Assets Under Management) நிதியாண்டு 2026-ன் முதல் பாதியில் (H1 FY26) ரூ. 1,47,673 கோடியாக இருந்த நிலையில், நிதியாண்டு 2027-ன் முதல் பாதியில் (H1 FY27) ஆண்டுக்கு ஆண்டு 42% வளர்ச்சியடைந்து ரூ. 2,09,317 கோடியாக அதிகரித்துள்ளது. இந்த அரை ஆண்டில், ஒருங்கிணைந்த கடன் சொத்து மதிப்பு ரூ. 27,401 கோடிகள் உயர்ந்து, 15% வளர்ச்சியைப் பதிவு செய்துள்ளது. கடந்த ஆண்டு ரூ. 4,386 கோடியாக இருந்த ஒருங்கிணைந்த வரிகளுக்கு பிந்தைய லாபம் (Consolidated Profit after tax), நிதியாண்டு 2027-ன் முதல் பாதியில் ரூ. 6,103 கோடியாக அதிகரித்துள்ளது. இது ஆண்டுக்கு ஆண்டு 39% உயர்வாகும்.

நிறுவனத்தின் செயல்பாடுகள் குறித்து மேலாண் இயக்குநர் அலெக்சாண்டர் ஜார்ஜ் முத்தூட் கூறுகையில், "முத்தூட் ஃபைனான்ஸ் 2027 நிதியாண்டை (FY27) வலுவான தொடக்கத்துடன் தொடங்கியுள்ளது. நடப்பு நிதியாண்டின் முதல் காலாண்டில் (Q1FY27) எங்கள் ஒருங்கிணைந்த கடன் சொத்து மதிப்பு (Consolidated Loan AUM) இதுவரை இல்லாத அளவாக ரூ. 1,91,532 கோடியை எட்டியது. இந்த வளர்ச்சி வேகம் இரண்டாவது காலாண்டிலும் (Q2FY27) தொடர்ந்து, ஒருங்கிணைந்த கடன் சொத்து மதிப்பு ஆண்டுக்கு ஆண்டு (YoY) 42% உயர்ந்து இதுவரை இல்லாத உச்ச அளவான ரூ. 2,09,317 கோடியை எட்டியுள்ளது. எங்கள் முதன்மையான தங்கக் கடன் வணிகத்தின் ஆரோக்கியமான வளர்ச்சியால், ஒருங்கிணைந்த வரிக்குப் பிந்தைய லாபம் (Profit after Tax) ஆண்டுக்கு ஆண்டு 39% வளர்ச்சி அடைந்து ரூ. 6,103 கோடியாக உயர்ந்துள்ளது. எங்கள் துணை நிறுவனங்களும் தொடர்ந்து வலுவான வளர்ச்சியைப் பதிவு



தூத்துக்குடி சிவன்கோவில் ஐப்பசி தேரோட்ட விழாவில் இன்று (03.11.2026) மாண்புமிகு மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை அமைச்சர் திரு.ஆ.ராஜா அவர்கள், மாவட்ட ஆட்சியர் திரு.விஜய மகாதன், இ.ஆ.ப., அவர்கள் ஆகியோர் இணைந்து திருநிதி பவனியை வடம் பிடித்து தொடங்கி வைத்தார்கள்.

செய்து, எங்கள் ஒருங்கிணைந்த கடன் சொத்துக்களில் கணிசமான பங்களிப்பை அளித்து வருகின்றன, இது தற்போது 12%-ஆக உள்ளது. நிறுவனத்தின் தனிப்பட்ட கடன் சொத்து மதிப்பு (Standalone Loan AUM) இதுவரை இல்லாத அளவாக ரூ. 1,87,810 கோடியை எட்டியுள்ளது. இந்த சாதனை, எங்கள் அர்ப்பணிப்புள்ள ஊழியர்களின் இடைவிடாத உழைப்பையும், எங்கள் மதிப்பிற்குரிய வாடிக்கையாளர்களின் அசைக்க முடியாத நம்பிக்கையையும் பிரதிபலிக்கிறது.

பாதுகாப்பான கடன்களுக்கான அதிகரித்து வரும் தேவை மற்றும் முறையான வங்கிச் சேவை சார்ந்த கடன்களின் வளர்ச்சி ஆகியவற்றின் ஆதரவோடு, இந்தியாவின் தங்கக் கடன் சந்தை தொடர்ந்து கணிசமான வளர்ச்சி வாய்ப்புகளை வழங்கி வருகிறது. நுண்கடன் (microfinance) வழங்கும் எங்கள் துணை நிறுவனமும், அளவீட்டுடனான வளர்ச்சி மற்றும் தங்கக் கடன் வணிகத்தில் களமிறங்கியதன் மூலம் மீண்டும் நல்ல திருப்பத்தைக் கண்டு வருகிறது. பெல்ஸ்டார் (Belstar) நிறுவனம் இதுவரை 163 தங்கக் கடன் கிளைகளைத் திறந்துள்ளது. தற்போது தங்கக் கடன்களில் மட்டுமே ஈடுபட்டு வரும் 'முத்தூட் மணி' (Muthoot Money) நிறுவனத்தின் இணைப்பானது, செயல்பாட்டு மற்றும் நிதிசார் திறன்களை மேலும் அதிகரிக்கும். எங்கள் பரந்த மற்றும் விரிவடைந்து வரும் கிளைப் பிணையம் (branch network) மற்றும் தங்கக் கடன்களில் பல தசாப்த கால அனுபவத்தைக் கொண்டு, சந்தையில் தொடர்ந்து முன்னிலை வகிக்கவும், 2027 நிதியாண்டு மற்றும் அதற்குப் பிறகும் எங்கள் வளர்ச்சி வேகத்தைத் தக்கவைக்கவும் நாங்கள் உறுதியான நிலையில் உள்ளோம்." என்றார்.

வாடிக்கையாளர்களுக்கு நிலையான பங்கு விலை வளர்ச்சியுடன் கூடிய தரமான நிறுவனங்களை வழங்கும் வகையில், ஐசிஐசிஐ லைஃப் BSE 500 Momentum குவாலிட்டி 50 இன்டெக்ஸ் ஃபண்ட் அறிமுகம்

சென்னை – 5 நவம்பர், 2026 சென்னை 04 நவம்பர் 2026: ICICI லைஃப் இன்சூரன்ஸ் நிறுவனம், தனது பெரும்பாலான யூனிட்-லிங்க்ட் இன்சூரன்ஸ் திட்டங்களுடன் (ULIPs) கிடைக்கும் புதிய ஈக்விட்டி முதலீட்டு விருப்பமான ஐசிஐசிஐ லைஃப் BSE 500 Momentum குவாலிட்டி 50 இன்டெக்ஸ் ஃபண்ட் -ஐ அறிமுகப்படுத்தியுள்ளது. இந்த நிதி, முதலீட்டாளர்களுக்கு வலுவான நிதி நிலைமை மற்றும் நேர்மறையான பங்கு விலை போக்கைக் கொண்ட நிறுவனங்களில் முதலீடு செய்வதற்கான வாய்ப்பை வழங்குகிறது.

இந்த இண்டெக்ஸ் ஃபண்ட், மொமண்டம் (Momentum) மற்றும் குவாலிட்டி (Quality) ஆகிய இரு காரணி சேர்க்கைகளில் சிறப்பாகச் செயல்படும் BSE 500 பட்டியலில் உள்ள 50 பங்குகளின் பன்முகப்படுத்தப்பட்ட போர்ட்ஃபோலியோவில் முதலீடு செய்வதன் மூலம், முதலீட்டாளர்கள் சிறந்த நீண்டகால வருவாயைப் பெற உதவும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

இந்த அறிமுகம் குறித்து ஐசிஐசிஐ லைஃப் இன்சூரன்ஸ் நிறுவனத்தின் தலைமை முதலீட்டு அதிகாரி (Chief Investment Officer) மணீஷ் குமார் கூறுகையில்: "ஐசிஐசிஐ லைஃப் BSE 500 Momentum குவாலிட்டி 50 இன்டெக்ஸ் ஃபண்ட் முதலீட்டாளர்களுக்கு உயர்தரமான தொழில்கள், வலுவான வருவாய் வாய்ப்புகள் மற்றும் நிலையான பங்கு விலை வளர்ச்சி கொண்ட நிறுவனங்களைக் கண்காணித்து, அதன் மூலம் நீண்டகாலச் செல்வத்தை உருவாக்குவதற்கான ஒரு சிறந்த வழியை வழங்குகிறது. முக்கியமாக, பங்கின் மீதான லாபம் (Return on Equity), கடன் மற்றும் சமபங்கு விகிதம் (Debt to Equity) மற்றும் ஒரு பங்கின் வருவாய் (Earnings per Share) போன்ற நிதி அளவீடுகளின் அடிப்படையில் தீர்மானிக்கப்படும் வலுவான நிதி நிலைமை கொண்ட மற்றும் கடந்த 12 மாதங்களில் நல்ல பங்கு விலை வளர்ச்சியைக் கண்டுள்ள நிறுவனங்களின் போர்ட்ஃபோலியோவில் முதலீட்டாளர்கள் முதலீடு செய்யும் வாய்ப்பைப் பெறுவார்கள்.

சந்தை மாற்றங்களைச் சரியாகக் கையாண்டு, நீண்டகால முதலீட்டின் கூட்டு வட்டி பலனை (Compounding Power) வாடிக்கையாளர்கள் பெறுவதை உறுதி செய்யும் எங்கள் நிறுவனத்தின் நோக்கத்திற்கு ஏற்பவே இந்த இண்டெக்ஸ் ஃபண்ட் அமைந்துள்ளது. இதன் மூலம் வாடிக்கையாளர்களின் குடும்பங்களுக்கு நிலையான வளர்ச்சியை நீடித்த நிதிப் பாதுகாப்பாக மாற்றும் ஒரு கட்டமைக்கப்பட்ட வழியை இது வழங்குகிறது."

செப்டம்பர் 30, 2026 நிலவரப்படி, BSE 500 Momentum குவாலிட்டி 50 இன்டெக்ஸ் ஃபண்ட் ஆனது 7 ஆண்டுகளில் 23.7% வரையிலான வருவாயை (Returns) ஈட்டித் தந்துள்ளது. இதன்படி, 7 ஆண்டுகளுக்கு முன்பு முதலீடு செய்யப்பட்ட ₹1 லட்சம், இன்று ₹4.4 லட்சமாக உயர்ந்திருக்கும். மேலும், வணிகத்தின் அடிப்படை அம்சங்கள் மற்றும் சந்தை வாய்ப்புகளின் மாற்றங்களுக்கு ஏற்ப, இந்த ஃபண்டின் போர்ட்ஃபோலியோ காலாண்டுக்கு ஒருமுறை சீரமைக்கப்பட்டு (rebalanced) புதுப்பிக்கப்படுகிறது.

குறிப்பாக, 2027 நிதியாண்டின் முதல் பாதியில் (H1-FY2027) நிறுவனத்தின் கிளைம் தீர்வு விகிதம் (Claim Settlement Ratio) 99.3% ஆக உள்ளதுடன், விசாரணை தேவையில்லாத கிளைம்களுக்கு சராசரியாக 1.1 நாட்களில் தீர்வு வழங்கப்பட்டுள்ளது. இது வாடிக்கையாளர்களுக்கும் அவர்களின் குடும்பங்களுக்கும் மிகவும் தேவையான நேரத்தில் உறுதுணையாக இருக்கும் நிறுவனத்தின் கடப்பாட்டைப் பிரதிபலிக்கிறது.

ஐசிஐசிஐ லைஃப் BSE 500 Momentum குவாலிட்டி 50 இன்டெக்ஸ் ஃபண்ட் ஆனது, நிறுவனத்தின் ஐசிஐசிஐ லைஃப் Protect N Gain, ஐசிஐசிஐ லைஃப் சிக்னேச்சர் Assure, ஐசிஐசிஐ லைஃப் சிக்னேச்சர், ஐசிஐசிஐ லைஃப் பிளாட்டினம், ஐசிஐசிஐ லைஃப் வெல்த் எலைட் ப்ரொ போன்ற பெரும்பாலான ULIP திட்டங்களானது ஆயுள் காப்பீட்டுப் பலன்களுடன் www.icicilife.com இணையதளத்தில் கிடைக்கும்.

முகமூடி அணிந்த கலைஞர் தி ஆர்ட்டிஸ்ட் 404 'ஜான் டோ' படத்திலிருந்து 'நான் போதுமா' பாடலை வெளியிட்டார்

சென்னை – 5 நவம்பர், 2026 'ஜான் டோ' திரைப்படத்தின் முதல் பாடல் 'நான் போதுமா' அதிகாரப்பூர்வமாக வெளியிடப்பட்டது. நடிகர் அர்ஜுன் தாஸின் ராப் குரலில் உருவாகியுள்ள இந்த முதல் பாடல், இயக்குநர் மதுமிதாவின் வரவிருக்கும் திரில்லர் படத்தின் திரையரங்க வெளியீட்டிற்கு முன்பாக, தி ஆர்ட்டிஸ்ட் 404-இன் சுவாரஸ்யமான இசையுலகை அறிமுகப்படுத்துகிறது. உலகளாவிய இசை உலகில், ஒரு கலைஞரின் முகத்தை விட அவரது அடையாளம் சில சமயங்களில் மிகவும் கவர்ச்சிகரமானதாக இருக்கும். மார்ஷ்மெல்லோ (Marshmello), டிராஃப்ட் பன்க் (Daft Punk) முதல் எம்.எஃப். டூம் (MF DOOM) வரை பல புகழ்பெற்ற சர்வதேச கலைஞர்கள் தங்கள் முகங்களை மறைத்து, முகமூடிகளை தனித்துவமான அடையாளங்களாக மாற்றி, தங்களது முகத்தை காட்டாமலேயே ரசிகர்களுடன் வலுவான தொடர்பை ஏற்படுத்தியுள்ளனர். அதே சுவாரஸ்யமான உத்தியைத் தமிழ் சினிமாவிற்கு கொண்டுவருகிறார் முகமூடி அணிந்த இசை ஆளுமை 'தி ஆர்ட்டிஸ்ட் 404'. வரவிருக்கும் 'ஜான் டோ' படத்தின் முதல் பாடலான 'நான் போதுமா' மூலம் இவர் கவனத்தை ஈர்த்துள்ளார்.

இப்பாடலின் சிறப்பம்சமாக, இதன் குரல் கூட்டணி அமைந்துள்ளது. நடிகர் அர்ஜுன் தாஸ் முதன்மை ராப் குரலில் கலக்கியுள்ளார், மேலும் மாளவிகா பாடலுக்கு தன் குரலை வழங்கியுள்ளார். ராப் வரிகளை அர்குஸ் அரியன் (Arcus Aryian) மற்றும் தி ஆர்ட்டிஸ்ட் 404 இணைந்து எழுதியுள்ளனர். இசையமைத்து, ஏற்பாடுகளையும் தி ஆர்ட்டிஸ்ட் 404 செய்துள்ளார். இதன் தனித்துவமான படைப்பாற்றல் மற்றும் வித்தியாசமான இசைக்கூட்டமைப்பு மூலம் 'நான் போதுமா' பாடல் 'ஜான் டோ' படத்தின் இசை உலகிற்கான ஒரு சிறந்த அறிமுகத்தை வழங்குகிறது. கடந்த சில ஆண்டுகளாக, தமிழ் சினிமாவில் பலதரப்பட்ட கதைகளை தேர்ந்தெடுத்து நடிப்பதன் மூலம் நடிகர் அர்ஜுன் தாஸ் தனது இடத்தை வலுப்படுத்தி வருகிறார். ஒவ்வொரு திரைப்படமும் ரசிகர்களின் எதிர்பார்ப்பை அதிகரித்து வரும் நிலையில், 'ஜான் டோ' அவரது திரைப்பயணத்தில் மிக முக்கியமான மற்றும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ள படமாக மாறியுள்ளது. 'தி ஆர்ட்டிஸ்ட் 404' ஐ சுற்றியுள்ள மர்மமும் படத்தின் விளம்பர பயணத்தில் பேசுபொருளாகியுள்ளது. படத்தின் முன்னோட்ட விழாவில் தனது முகத்தை வெளிப்படுத்தாமல் முகமூடியுடன் தோன்றி அனைவரையும் வியக்க வைத்தார் இந்த கலைஞர். தற்போது 'நான் போதுமா' பாடலின் வெளியீட்டின் மூலம் இசை முன்னணிக்கு வந்துள்ளது, அதே நேரத்தில் முகமூடிக்கு பின்னால் இருப்பவர் பற்றிய மர்மம் தொடர்ந்து நீடிக்கிறது. மதுமிதா எழுதி இயக்கியுள்ள 'ஜான் டோ' படத்தில் அர்ஜுன் தாஸ், சஞ்சனா நடராஜன், சிருஷ்டி, அனுபமா குமார், அர்ச்சனா சந்தோக், படவா கோபி, ஸாரா வினீத் சந்தோக் மற்றும் நீரவ் எஸ். ஆகியோர் அடங்கிய நட்சத்திர பட்டாளமே நடித்துள்ளது. இப்படத்தை பிரசாத் தேவினேனி மற்றும் சோபு யர்லகா தயாரித்துள்ளனர்.



கிஷோர் கேடாரி மற்றும் மதுமிதா இணை தயாரிப்பாளர்களாக பணியாற்றுகின்றனர். கதை மற்றும் திரைக்கதையை மதுமிதா மற்றும் நிக்கோலஸ் செவாலியர் எழுதியுள்ளனர், சௌம்யா சர்மா கிரியேட்டிவ் தயாரிப்பாளராக உள்ளார். பிரீதா ஜெயராமன் ஒளிப்பதிவு செய்ய, அஸ்வினி காலே தயாரிப்பு வடிவமைப்பாளராகவும், விஜய் வெங்கட்ராமன் படத்தொகுப்பாளராகவும் பணியாற்றியுள்ளனர். 'நான் போதுமா' பாடல் தற்போது வெளிவந்துள்ள நிலையில், 'ஜான் டோ' படம் தனது இசை உலகை ரசிகர்களுக்கு அறிமுகப்படுத்தியுள்ளது. முகம் வெளிப்படும் முன்பே இசையை பேச வைக்கும் இந்த கலைஞருடன், 'தி ஆர்ட்டிஸ்ட் 404'-ன் மர்மம் நாளுக்கு நாள் மேலும் சுவாரஸ்யமாகி வருகிறது. 'ஜான் டோ' திரைப்படம் வரும் நவம்பர் 13, 2026 அன்று திரையரங்குகளில் வெளியாகிறது.

புதிய தொழிலாளர் நலச் சட்டங்கள் தொடர்பான விழிப்புணர்வு நிகழ்ச்சி

சென்னை – 5 நவம்பர், 2026 புதிய தொழிலாளர் நலச் சட்டங்கள் தொடர்பான விழிப்புணர்வு நிகழ்ச்சி: இந்தூரில் மத்திய தொழிலாளர் நல அமைச்சகம் ஏற்பாடு.

மத்திய தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு அமைச்சகம், மத்தியப் பிரதேச அரசின் தொழிலாளர் துறை ஆகியவை தொழில் அமைப்புகளுடன் இணைந்து தொழிலாளர் நலன், சமூகப் பாதுகாப்பு குறித்த மண்டல அளவிலான திறன் மேம்பாடு மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சியை இந்தூரில் 2026 நவம்பர் 3 அன்று நடத்தின. மத்தியப் பிரதேச தொழிலாளர் ஆணையர் சுஷ்ரி ஷீதலா பாட்லே தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில், மத்திய, மாநில தொழிலாளர் நலத் துறைகள், தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி நிறுவனம், தொழிலாளர் அரசு ஈட்டுறுதிக் கழகம் ஆகியவற்றின் உயர் அலுவலர்கள், தொழில் துறைப் பிரதிநிதிகள் உட்பட 150-க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

இ-சேவை மையம்
ஸ்டார் ரெயின்போ சர்வீசஸ்

PASSPORT | MSME | PAN | AADHAAR
FSSAI | PATTA | LEGALHEIR
2,4 WHEELER INSURANCE
PROPERTY TAX, EB - NAME TRANSFER
STATE AND CENTRAL GOVT
AUTHORISED FRANCHISEE

ALL ONLINE SERVICES

8148231942 / 8144337349
11, South Perumal Koil Street, Vadapalani, Chennai - 600 026.

உங்கள் வீடு தேடிவரும் சிறப்புக் சிகிச்சை: காவேரி மருத்துவமனையின் நடமாடும் எலும்பியல் மற்றும் முதுகுத் தண்டுவட பராமரிப்புப் பிரிவு அறிமுகம்!



சென்னை – 5 நவம்பர், 2026 பொதுமக்களின் வீடு தேடிச் சென்று சிறப்புக் மருத்துவ சேவைகளை வழங்கும் நடமாடும் எலும்பியல் மற்றும் முதுகுத் தண்டுவட பராமரிப்புப் பிரிவை (Mobile Orthopaedic and Spine Care Unit) வடபழனி காவேரி மருத்துவமனை (Kauvery Hospital Vadapalani) பெருமையுடன் தொடங்கியுள்ளது. ஹெக்சாவேர் டெக்னாலஜிஸ் (Hexaware Technologies) நிறுவனத்தின் சமூகப் பொறுப்புணர்வு (CSR) திட்டத்தின் கீழ் இந்தச் சிறப்பான மக்கள் நல முயற்சி முன்னெடுக்கப்பட்டுள்ளது. இந்த நடமாடும் மருத்துவப் பிரிவில் டிஜிட்டல் எக்ஸ்-ரே (digital X-ray), எலும்பு தாது அடர்த்தி (BMD) பரிசோதனைகள் மற்றும் எலும்பு, மூட்டு மற்றும் முதுகுத் தண்டுவடக் கோளாறுகளை முன்கூட்டிய கண்டறியும் ஆரம்பக்கட்ட பரிசோதனைகள் (early screening) மேற்கொள்ளப்படுகின்றன. முதியோர்கள் (senior citizens) மற்றும் மருத்துவ வசதிகள் குறைவாக உள்ள கிராமப்புற சமூகங்களைச் சேர்ந்த மக்கள் (rural communities) எளிய முறையில் உயர்தர மருத்துவப் பரிசோதனைகளைப் பெறும் வகையில் இந்தத் திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது.

காவேரி மருத்துவமனையின் இந்த நடமாடும் க்ளினிக்கில் ஆன்-போர்டு ரீடருடன் கூடிய டிஜிட்டல் எக்ஸ்-ரே மற்றும் எலும்பு தாது அடர்த்தி (Bone Mineral Density (BMD)) பரிசோதனைக் கருவிகள் முழுமையாகப் பொருத்தப்பட்டுள்ளன. இதனால், பொதுமக்கள் தங்களுக்குத் தேவையான அத்தியாவசிய மருத்துவப் பரிசோதனைகளைத் தங்களுடைய இருப்பிடத்திற்கு அருகிலேயே மிக எளிதாகப் பெற்றுக் கொள்ள முடியும். இதனால், முதியோர்கள், இயல்பாக நடமாட முடியாதவர்கள் (mobility limitations) மற்றும் தொலைதூரங்களில் உள்ள மருத்துவமனைகளுக்குச் சென்று நீண்ட வரிசையில் நின்று பரிசோதனை செய்வதில் சவால்களைச் சந்திக்கும் மக்களுக்கு இந்தத் திட்டம் ஒரு மாபெரும் வாய்ப்பாக அமைந்துள்ளது.

ஆர்த்ரிடிஸ் (வாத நோய்), ஆஸ்டியோபோரோசிஸ் (எலும்பு மெலிவு நோய்), எலும்பு முறிவுகள் மற்றும் முதுகுத் தண்டுவடக் கோளாறுகள் போன்ற பல்வேறு உடல்நலப் பிரச்சினைகளை ஆரம்ப நிலையிலேயே கண்டறிந்து, உரிய நேரத்தில் சிகிச்சை பெற இந்த நடமாடும் க்ளினிக் பெரிதும் உதவும் வகையில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இதில் எடுக்கப்படும் அதிநவீன டிஜிட்டல் எக்ஸ்-ரே வசதி மூலம், மருத்துவர்கள் எலும்பு மற்றும் மூட்டுப் பிரச்சினைகள், எலும்பு முறிவுகள் மற்றும் முதுகுத் தண்டுவடக் குறைபாடுகளை மிகத் துல்லியமாக ஆய்வு செய்து மதிப்பீடு செய்ய முடியும். அதேபோல், BMD (எலும்பு தாது அடர்த்தி) மதிப்பீடுகள் மூலம், எலும்பு அடர்த்தி குறைபாடு மற்றும் ஆஸ்டியோபோரோசிஸ் ஆபத்து இருக்கிறதா என்பதையும் நாம் முன்கூட்டியே கண்டறிய முடியும். இதனால், சரியான நேரத்தில் தேவையான பாதுகாப்பான ஆலோசனைகளையும் சிகிச்சையையும் பெற இந்த நடமாடும் க்ளினிக் உதவுகிறது.

காவேரி மருத்துவமனையின் நடமாடும் எலும்பியல் மற்றும் முதுகுத் தண்டுவட பராமரிப்புப் பிரிவு குறித்து காவேரி மருத்துவமனை குழுமத்தின் இணை நிறுவனர் மற்றும் நிர்வாக இயக்குநர் டாக்டர் அரவிந்தன் செல்வராஜ் (Dr. Aravindan Selvaraj, Co-founder and Executive Director, Kauvery Group of Hospitals) கூறுகையில், எலும்பு, மூட்டு மற்றும் முதுகுத் தண்டுவடக் கோளாறுகள் நம்முடைய அன்றாட வாழ்க்கையின் செயல்பாடுகளையும், பழக்கவழக்கங்களையும், வாழ்க்கைத் தரத்தையும் கடுமையாகப் பாதிக்கக்கூடும். குறிப்பாக முதியோர்கள் இதனால் அதிகம் சிரமப்படுகிறார்கள். மறுபக்கம், கிராமப்புறங்கள் மற்றும் தொலைதூரப் பகுதிகளில் வசிக்கும் எளிய மக்களுக்கு இது போன்ற சிறப்புக் மருத்துவச் சேவைகளைப் பெறுவது இன்றும் ஒரு சவாலாகவே நீடித்து வருகிறது. தரமான மருத்துவச் சிகிச்சை கிடைப்பதில் இருக்கும் இந்த இந்தத் தடையை உடைக்கும் வகையில், அத்தியாவசிய பரிசோதனை மற்றும் மதிப்பீட்டு வசதிகளைப் பொதுமக்களின் இருப்பிடத்திற்கு அருகிலேயே கொண்டு சென்று, உரிய நேரத்தில் துல்லியமான மருத்துவ உதவியைப் பெற்றுத் தருவதே எங்கள் லட்சியமாகும். ஹெக்சாவேர் டெக்னாலஜிஸ் (Hexaware Technologies) நிறுவனத்துடன் இணைந்து மேற்கொண்டிருக்கும் இந்த மக்கள் நல முயற்சி, நாங்கள் சேவை செய்யும் சமூகங்களுக்கு உயர்தர மருத்துவச் சேவைகளை மேலும் எளிதாகக் கொண்டு சேர்க்க வேண்டுமென்ற எங்களது அர்ப்பணிப்பின் ஒரு வெளிப்பாடுதான்'' என்றார்

ஹெக்சாவேர் நிறுவனத்தின் நிதிப்பிரிவு துணைத் தலைவர் டாக்டர் ரம்யா கண்ணன் (Dr. Ramya Kannan, Vice President – Finance, Hexaware Technologies) கூறுகையில், "அர்த்தமுள்ள சமூக நலத் திட்டங்கள் மக்களின் அன்றாட வாழ்வில் தெளிவான மற்றும் நேர்மையான மாற்றங்களை உருவாக்க வேண்டும் என்பதில் ஹெக்சாவேர் நிறுவனம் எப்போதும் உறுதியான நம்பிக்கை வைத்திருக்கிறது. இதன் தொடர்ச்சியாக, முதியோர் மற்றும் கிராமப்புற, தொலைதூரப் பகுதிகளில் வசிக்கும் எளிய மக்களின் இருப்பிடத்திற்கே எலும்பியல் மற்றும் முதுகுத் தண்டுவடச் சிறப்புச் சிகிச்சைகளைக் கொண்டு சேர்க்கக் காவேரி மருத்துவமனையுடன் இணைந்து பணியாற்றுவதில் பெருமகிழ்ச்சி அடைகிறோம். உயர்தரச் சிறப்புக் மருத்துவச் சேவைகளைப் பெறும் வாய்ப்புகளை எளிதாக்குவதோடு, எலும்பு ஆரோக்கியம், உடல் இயக்கம் (mobility) மற்றும் ஆரோக்கியமான முதுமை (healthy ageing) குறித்த விழிப்புணர்வை மக்களிடையே இந்தத் திட்டம் உருவாக்கும் என்று நாங்கள் முழுமையாக நம்புகிறோம்" என்றார்.

இந்தச் கூட்டு முயற்சியின் மூலம், வடபழனி காவேரி மருத்துவமனை மற்றும் ஹெக்சாவேர் டெக்னாலஜிஸ் ஆகிய இரு நிறுவனங்களும் இணைந்து, பொதுமக்களுக்குத் தேவையான அத்தியாவசிய மருத்துவப் பரிசோதனை சேவைகளை மிகவும் எளிதாகப் பெறுவதற்கான நடவடிக்கையை எடுத்துள்ளன. எலும்பு, மூட்டு மற்றும் முதுகுத் தண்டுவடக் கோளாறுகளை ஆரம்ப நிலையிலேயே கண்டறிந்து, அதற்கேற்ப தகுந்த சிகிச்சைகளைப் பெற இந்தத் திட்டம் பெரிதும் ஊக்குவிக்கிறது. இதன் மூலமாக, அதிக எண்ணிக்கையிலான மக்கள் தங்கள் உடல் இயக்கத் திறனையும் (mobility) யாருடைய உதவியுமின்றி சுயமாக அன்றாடப் பணிகளை மேற்கொள்ளும் வாழ்க்கையையும் (independence) மேற்கொள்ள இந்த நடமாடும் க்ளினிக் உங்கள் வீட்டிற்கு அருகிலேயே வந்து சேவைகளை அளிக்க வலம் வர இருக்கிறது.

விண்வெளி, எரிசக்தித் துறைகளுக்குப் பயன்படும் வகையில் உலோகங்களை வெட்டும் கருவிகளுக்கான நவீனப் பூச்சு

சென்னை – 5 நவம்பர், 2026 விண்வெளி, எரிசக்தித் துறைகளுக்குப் பயன்படும் வகையில் உலோகங்களை வெட்டும் கருவிகளுக்கான நவீனப் பூச்சு தொழில்நுட்பத்தை உருவாக்கிய இந்திய விஞ்ஞானிகள்.

விண்வெளித்துறை, மின் உற்பத்தி, பெட்ரோலிய வேதிப் பொருட்களுக்கான இயந்திரக் கட்டமைப்புகளில் பயன்படுத்தப்படும் அதிநவீன நிக்கல் உலோகக் கலவைகளைச் செதுக்குவதற்கும், வெட்டுவதற்கும் பயன்படும் கருவிகளின் ஆயுளை நீட்டிக்கும் வகையிலான மேம்பட்ட மேற்பரப்புப் பூச்சு தொழில்நுட்பத்தை விஞ்ஞானிகள் உருவாக்கியுள்ளனர். மத்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறையின் கீழ், ஹைதராபாத்தில் செயல்பட்டு வரும் சர்வதேசப் தூள் உலோகவியல் மற்றும் புதிய பொருட்கள் ஆராய்ச்சி மையத்தின் விஞ்ஞானிகள் இந்த ஆய்வை மேற்கொண்டுள்ளனர்.

டங்ஸ்டன் கார்பைடு வெட்டும் கருவிகளில் டைட்டானியம் அலுமினியம் சிலிகான் நைட்ரைடு, குரோமியம் அலுமினியம் சிலிகான் நைட்ரைடு ஆகிய இரண்டு நானோ கூட்டுப் பாதுகாப்புப் பூச்சுகளை உருவாக்கி அதன் செயல்திறனை அவர்கள் ஆய்வு செய்தனர். இதன் மூலம் வெட்டும் கருவிகளின் தேய்மானம் பெருமளவு குறைக்கப்பட்டு, அவற்றின் ஆயுட்காலம் 60 சதவீதம் முதல் 200 சதவீதம் வரை அதிகரிப்பது கண்டறியப்பட்டுள்ளது.

ஒவ்வொரு உலோகக் கலவையின் தன்மைக்கேற்ப பொருத்தமான பூச்சுகளைத் தேர்ந்தெடுப்பதற்கான அறிவியல் வழிகாட்டலை இந்த ஆராய்ச்சி வழங்கியுள்ளது. இக்கண்டுபிடிப்பு உற்பத்திச் செலவைக் குறைக்கவும், உற்பத்தித் திறனை உயர்த்தவும் உதவிகரமாக இருக்கும்.



MM கிளினிக்
அரசு மூத்த மருத்துவ அதிகாரி

காலை 10 மணி முதல் மதியம் 2 மணி வரை - முதல் முறை இந்த நோட்டீசை கொண்டுவருபவர்களுக்கு சிகிச்சை இலவசம்

8668018731
அழகிரி நகர் மெயின் ரோடு, வடபழனி, சென்னை - 26.